செய்தி வெளியீடு எண். 53 நாள்: 25.01.2018

**8-வது தேசிய வாக்காளர் தினத்தையொட்டி பல்வேறு போட்டிகள் (ம) கலைநிகழ்ச்சிகளை மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்து வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் (ம) பாராட்டு சான்றிதழ்களை வழங்கினார்**

முன்னதாக மினி மாரத்தான் போட்டிகளை மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் / மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.எ.சுந்தரவல்லி,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார். இதில் 200-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகம் முதல் புல்லரம்பாக்கம் காவல் நிலையம் வரையுள்ள 5 கி.மீ. தூரத்திற்கு போட்டியில் கலந்துக்கொண்டு மாணவர்கள் ஓடிச் சென்றனர்.

பின்னர், திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் 350-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களையும், 100-க்கும் மேற்பட்ட மகளிர் சுய உதவிக்குழு உறுப்பினர்களைக் கொண்ட விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்தார். இப்பேரணியில் கலந்துகொண்ட மாணவர்கள் அனைவரும் வாக்களிக்க வேண்டும் என்பதை வலியுறுத்தும் விழிப்புணர்வு பலகைகளை ஏந்திச் சென்றனர். இப்பேரணி திருவள்ளூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் தொடங்கி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நிறைவடைந்தது. இப்பேரணியில் 450-க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர்களும், மகளிர் சுய உதவிக் குழு உறுப்பினர்களும் கலந்துக்கொண்டனர்.

பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் வெண்மனம்புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி மாணவியர்களின் வில்லுப்பாட்டு, செவ்வாய்ப்பேட்டை ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளி மாணவர்களின் நாடகமும் மற்றும் ஆதிதிராவிட நல மேல்நிலைப்பள்ளி மாணவிகளின் நடனமும், காந்தி அறக்கட்டளை கல்லூரி மாணவிகளின் நடனமும், திருமுருகன் கலைக்கல்லூரி மாணவிகளின் நடனமும் நடைபெற்றது.

மேலும், தேசிய வினாடி வினா போட்டிகளில் பங்கு பெற்ற 17 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் மற்றும் இதில் வெற்றி பெற்ற 3 பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார்.

திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய வாக்காளர் தின விழாவில் 18 வயது பூர்த்தியடைந்தவர்களுக்கு புதிய வாக்காளர் அடையாள அட்டையை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் வழங்கினார். பின்னர், மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் தேசிய வாக்காளர் தின விழாவையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் தேர்தல் விழிப்புணர்வு பாடல் அடங்கிய குறுந்தகட்டினை வெளியிட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

இவ்விழாவில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.கே.முத்து, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (தேர்தல்) திருமதி.செ.மணிலா, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) திரு.ஆர்.சக்திவேல், உதவி ஆட்சியர் (பயிற்சி) திரு. பவன்குமார். க.கிரியப்பனவர்,இ.ஆ.ப., திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி.கெ.ரா.திவ்யஶ்ரீ, வட்டாட்சியர்கள் மற்றும் துணை வட்டாட்சியர்கள் கலந்துக்கொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திருவள்ளூர்.**